இன்றைய செய்தி நாளைய வரலாறு



கலைஞர் 100
1924 - 2024

# முரசொலி

Murasoli

www.murasoli.in | நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி | murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 84 – ஒலி : 321 – திருவள்ளுவர் ஆண்டு 2057 – ஆனி 18 – வியாழக்கிழமை 02 ஜூலை 2026 – வெளியூர் 8 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 84 - Issue 321 : Thiruvalluvar Year - 2057 - Aani 18 - Thursday 02 July 2026 - Dak 8 Pages ₹ 5.00

### கழகத்தின் கட்டமைப்பில் கிளைக் கழகம் முதல் – தலைமைக் கழகம் வரை

### ஒரே சீரான மாற்றங்களைப் பரிந்துரைத்திட

# கழக மறுசீரமைப்பு ஆலோசனைக் குழு!

## கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு!

**சென்னை, ஜூலை 2 -**

**கழகத்தின் கட்டமைப்பில் கிளைக்கழகம் முதல் தலைமைக் கழகம் வரை ஒரே சீரான மாற்றங்களைப் பரிந்துரைத்திட கழக மறுசீரமைப்பு ஆலோசனைக் குழுவை கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவித்துள்ளார்.**

**அவரது அறிவிப்பு வருமாறு :-**

தமிழ்நாட்டின் வளத்துக்கும் நலத்துக்கும் 75 ஆண்டுகளைக் கடந்தும் உழைத்து வரும் பேரியக்கம் திராவிட முன்னேற்றக் கழகம். ஆறு முறை தமிழ்நாட்டை ஆண்டது கழகம். இன்றைய நவீன தமிழ்நாட்டை உருவாக்கியது கழகம். எதிர்க்கட்சியாக இருக்கும்போது தமிழ்நாட்டைக் காக்கும் காவல் அரணாக இருப்பதும் கழகம் தான்.

### மறுசீரமைப்பு ஆலோசனைக் குழுவின் முக்கியப் பணிகள்!

**கழக மாவட்டங்களில் மேற்கொள்ள வேண்டிய மறுவரையறை, கழகத்தின் சார்பு அணிகளின் மறுசீரமைப்பு, தேர்தல் பணிக்குழு உள்ளிட்ட பல்வேறு குழுக்களில் மேற்கொள்ள வேண்டிய சீரமைப்புகள், தேர்தல் பணிகளைச் செய்வதற்கான நிரந்தர அமைப்பு, தலைமைக்கான பரிந்துரைகளை மேற்கொள்ளும் (Think tank) போன்றதொரு அமைப்புக்கான தேவை, அக்குழுக்களுக்கான பணிகளின் மறுவரையறை உள்ளிட்டவை குறித்தும் பரிந்துரைகளை ஆகஸ்ட் முதல் வாரத்தில் என்னிடம் வழங்கிடும்.**

**கழகம் கம்பீரமாக நிற்க நம் அமைப்பு முறைதான்!**

இத்தகைய அரசியல் வரலாற்றில், தேர்தல் வெற்றியும் தோல்வியும் மாறி மாறி வந்தபோதும், கழகம் என்றைக்கும் வலுமிக்க எஃகுக் கோட்டையாகவே கம்பீரமாக நிற்கிறது. அதற்குக் காரணம் கழகத்தின் கோடிக்கணக்கான உடன்பிறப்புகளும், கழகத்தின் அமைப்பு முறையும் ஆகும்.

இந்த இரண்டும், நாளுக்கு நாள் வலிமை பெற்று வரும் சூழலைக் கழகம் உருவாக்கி வைத்துள்ளது. காலந்தோறும் தன்னைப் புதுப்பித்துக் கொண்டே வந்துள்ளது கழகம். கொள்கையை அடிப்படையாக வைத்து, அமைப்பு முறையிலும் கட்டமைப்பிலும் புதுமைகளைச் செய்ய நாம் தவறியதில்லை. அதேபோன்ற மறுசீரமைப்பை மீண்டும் தொடங்க இருக்கிறோம் என நான் அறிவித்தேன். அதற்கான அறிவிப்பை, இந்த அறிக்கை மூலமாகத் தெரிவிக்க விரும்புகிறேன்.



**உடன் பிறப்புகளின் கருத்தறிய ஆய்வுக் குழுவை அனுப்பினேன்!**

கடந்த சட்டமன்றத் தேர்தல் முடிவு வெளியான உடனேயே கழக உடன் பிறப்புகளின் கருத்துகளைக் கேட்க வேண்டும் என நான் முடிவெடுத்தேன். இதற்கான குழுக்களை அமைத்தேன். ஒவ்வொரு தொகுதியாகச் சென்று நிர்வாகிகளையும் தொண்டர்களையும் நேரடியாகச் சந்தித்து எனது கண்களும் காதுகளுமாக இருந்து அவர்தம் கருத்துகளைப் பெற்று வருமாறு 19 குழுக்களை அமைத்து, ஒவ்வொரு குழுவுக்கும் தலா இருவர் என 38 பேரை ஆய்வுக்குழுவினராக அனுப்பி வைத்திருந்தேன்.

தமிழ்நாடு முழுவதும் இவர்கள் சென்றார்கள். எனது எதிர்பார்ப்பு எள் முனையளவும் சிதையாமல் 38 பேரும் இரவு பகல் பாராது கழகத்தினரைச் சந்தித்து – ஆய்ந்து அறிக்கைகளைத் தயாரித்து என்னை நேரடியாகச் சந்தித்துக் கொடுத்துள்ளார்கள். அறிக்கையை வழங்கும்போது ஒவ்வொருவரும் தனித்தனியாக என்னிடம் கலந்துரையாடினர். அவர்களின் கருத்துகளையெல்லாம் கேட்டறிந்து, அவர்கள் வழங்கிய அறிக்கையை ஒவ்வொரு நாளும் நானே படித்து குறிப்பெடுத்து வருகிறேன்.

**கழகத் தலைமை மீது என்றும் மாறா பற்று கொண்ட தொண்டர்கள்!**

கழகத்தின் மீதும், கழகத் தலைமை மீதும் நிர்வாகிகளும் தொண்டர்களும் வைத்துள்ள ஆழமான பற்றுக்கும் – உண்மையான நம்பிக்கைக்கும் நான் தலைவணங்குகிறேன். இத்தகைய உடன்பிறப்பு களுக்குத் தலைமை வகிக்கும் தகுதியை நான் பெற்றுள்ளேன் என்பதை நினைத்தும் பெருமைப்படுகிறேன்.

கள ஆய்வுக்குழுவினர் ஒவ்வொரு தொகுதியாகச் சென்று, கழகத்தினர் மற்றும் நிர்வாகிகளைச் சந்தித்தாலும், நிர்வாகிகள் அல்லாத கழக ஆதரவாளர்களும், இணையத்தில் களமாடும் களவீரர்களும் தங்கள் கருத்துகளைப் பகிர வாய்ப்பிருக்குமா எனவும் ஒரு கேள்வி எழுந்தது.

அதன் விளைவுதான் ஆன்லைன் வழியாகக் கருத்துகளைப் பெற, 'உடன்பிறப்பின் குரல்' என்ற இணையதளத்தை உருவாக்கச் சொல்லியிருந்தேன்.

**உடன் பிறப்புகளில் குரல் இணையத்தில் 6 லட்சம் பேர் கருத்து!**

அதில் கிட்டத்தட்ட ஆறு லட்சம் கருத்துகள் பெறப்பட்டுள்ளன. அவற்றை மனித தலையீடின்றி ஏ.ஐ தொழில்நுட்பம் வழியாக அறிக்கையாகத் தயாரித்து வழங்கியுள்ளனர். அவற்றையும் படித்துப் பார்த்து தனிப்பட்ட முறையில் குறிப்பெடுத்து வைத்திருக்கிறேன். இவர்கள் அனைவரின் ஒட்டுமொத்த கருத்து என்பது கழகத்தின் மறுசீரமைப்பு ஆகும். காலத்திற்கேற்ற மறுசீரமைப்புகளைத்தான் பெரும்பாலான நிர்வாகிகள் வலியுறுத்திக் கூறியுள்ளனர். அதனடிப்படையில் மறுசீரமைப்பு குறித்தும், கழகத்தின் மறுகட்டுமானம் குறித்தும் எனக்கு சில கருத்துகள் இருக்கின்றன. கழகத்திற்குப் புத்துணர்ச்சி அளிக்கும் வகையில் கிளைக் கழகங்கள் தொடங்கி தலைமைக் கழகம் வரை செய்யப்பட வேண்டிய மறுசீரமைப்புக்கு இது சரியான தருணம் என நான் நினைக்கிறேன்.

**மறுசீரமைப்பும் – மறுகட்டுமானமும் அவசியம்!**

நம்முடைய கடந்தகால குறைகளைக் களைந்து, மக்களிடம் புதிய வடிவில் செல்வதற்கும் மறுசீரமைப்பும் – மறுகட்டுமானமும் மிக அவசியம் என்பதை நாம் உணர்ந்து, அதற்குத் தயாராகிட வேண்டும்.

இதுவரை கழகத்தினர் மூலம் எனக்குக் கிடைக்கப்பெற்றுள்ள கருத்துகளையும், ஆலோசனைகளையும் பரிசீலித்து கழகத்தின் கட்டமைப்பில் கிளைக் கழகம் முதல் தலைமைக் கழகம் வரையில் ஒரே சீரான மாற்றங்களைப் பரிந்துரைத்திட கீழ்கண்டவாறு குழு அமைக்கப்படுகிறது.

**கழக மறுசீரமைப்பு ஆலோசனைக் குழு:**

- **திரு. தங்கம் தென்னரசு**
- **திருமதி. கீதா ஜீவன்**
- **திரு. அர. சக்கரபாணி**
- **திரு. எஸ்.எஸ்.சிவசங்கர்**
- **திருமதி. தமிழரசி ரவிக்குமார்**
- **திரு. எம்.எம்.அப்துல்லா**
- **திரு. இ. பரந்தாமன்**
- **திரு. ச. முரசொலி, எம்.பி.,**
- **டாக்டர். எழிலன்**
- **திரு. எஸ்.கே.பி. கருணா**

ஆகியோர் இதில் இடம் பெறுவர்.

இக்குழுவானது, கழக மாவட்டங்களில் மேற்கொள்ள வேண்டிய மறுவரையறை, கழகத்தின் சார்பு அணிகளின் மறுசீரமைப்பு, தேர்தல் பணிக்குழு உள்ளிட்ட பல்வேறு குழுக்களில் மேற்கொள்ள வேண்டிய சீரமைப்புகள், தேர்தல் பணிகளைச் செய்வதற்கான நிரந்தர அமைப்பு, தலைமைக்கான பரிந்துரைகளை மேற்கொள்ளும் (Think tank) போன்றதொரு அமைப்புக்கான தேவை, அக்குழுக்களுக்கான பணிகளின் மறுவரையறை உள்ளிட்டவைக் குறித்தும் பரிந்துரைகளை ஆகஸ்ட் முதல் வாரத்தில் என்னிடம் வழங்கிடும்.

அடுத்த நூறாண்டுகளுக்குக் கழகத்தை வழிநடத்திடும் வகையிலான இப்பரிந்துரைகள், கழக உயர்நிலைச் செயல்திட்டக் குழு மற்றும் மாவட்டக் கழகச் செயலாளர்கள் ஆகியோருடன் முழுமையாக விவாதிக்கப்பட்டு கழகத்தில் மறுசீரமைப்பு மேற்கொள்ளப்படும்.

### கழக உயர்நிலைச் செயல்திட்டக் குழு – மாவட்டக் கழகச் செயலாளர்களுடன் முழுமையாக விவாதிக்கப்பட்டு கழகத்தில் மறுசீரமைப்பு மேற்கொள்ளப்படும்!

இவ்வாறு கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவித்துள்ளார்.

---

### குமரியில் அணுக்கனிம சுரங்கம் அமைக்க அனுமதி நீட்டிப்பு!

# த.வெ.க. அரசின் இரட்டை வேடம்!

## கழகத் துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி. கடும் கண்டனம்!



**சென்னை, ஜூலை 2 -**

**"கன்னியாகுமரி மாவட்டத்தில் அணுக் கனிம சுரங்கம் அமைக்க த.வெ.க. அரசு அனுமதியை நீட்டித்திருப்பது தென் மாவட்ட மக்களுக்கு செய்யும் மாபெரும் துரோகமாகும். "இது த.வெ.க. அரசின் இரட்டை வேடம்" என்று கழகத் துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி. தமது சமூக வலைதளப் பதிவில் கடும் கண்டனம் தெரிவித்துள்ளார்.**

கன்னியாகுமரி மாவட்டம், மணவாளக் குறிச்சியில் செயல்பட்டு வரும் ஒன்றிய அரசின் இந்திய அரிய மணல் ஆலைக்கு, அணுசக்தி கனிமங்களை வெட்டியெடுப்பதற்கான கால அனுமதியை மேலும் ஓராண்டுக்கு நீட்டித்து த.வெ.க. அரசு உத்தரவிட்டுள்ளது. கன்னியாகுமரி மாவட்டத்தின் கிள்ளியூர் தாலுகாவுக் குட்பட்ட கீழ் மிடாலம், மிடாலம், இனயம் புத்தன்துறை, ஏழுதேசம் மற்றும் கொல்லங்கோடு ஆகிய 5 முக்கிய கடலோரக் கிராமங்களில், சுமார் 1,144 ஹெக்டேர் பரப்பளவில் அணு தாது மணல் (இல்மனைட், ருட்டைல், ஜிர்கான், மோனசைட்) வெட்டி எடுக்கும் நடவடிக்கைக்காக பூர்வாங்க பணிகளை மத்திய பொதுத்துறை நிறுவனமான ஐ.ஆர்.இ.எல். தீவிரப்படுத்தியது.

இதற்கு தக்கலையில் உள்ள பத்மநாபபுரம் சார் ஆட்சியர் அலுவலகத்தில் கருத்து கேட்பு கூட்டம் நடத்த திட்டமிடப்பட்டிருந்தது. கடலோர கிராம மக்களின் கடும் எதிர்ப்பு காரணமாக கருத்து கேட்பு கூட்டம் ரத்து செய்யப்பட்டிருந்தது. இதற்கிடையே இத்திட்டம் நாட்டின் வியூக முக்கியத்துவம் வாய்ந்தது எனக் கூறி, இதற்கான பொதுமக்கள் கருத்து கேட்புக் கூட்டங்கள் நடத்துவதிலிருந்து ஒன்றிய சுற்றுச்சூழல் அமைச்சகம் கடந்த 2025 ஜூலை மாதம் விலக்கு அளித்தது.

இதைதொடர்ந்து, இத்திட்டத்திற்கான இறுதி அனுமதியைப் பெறும் நோக்கில், ஐ.ஆர்.இ.எல். நிறுவனம் கடந்த மார்ச் 26 அன்று, ஒன்றிய அரசிடம் புதிய கடலோர ஒழுங்குமுறை மண்டல ஒப்புதல் கோரி விண்ணப்பித்தது. இத்திட்டம் முழுமையாக செயல்பாட்டுக்கு வந்தால், ஆண்டுக்கு 15 லட்சம் டன் அணு தாதுக்கள் வெட்டி எடுக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், சமீபத்திய ஒன்றிய பட்ஜெட்டில் அறிவிக்கப்பட்டுள்ள அரியவகை கனிம வழித்தடங்கள் அமைக்கும் திட்டமும் இதற்குச் சாதகமாகப் பயன்படுத்தப்படலாம் என அஞ்சப்படுகிறது

கன்னியாகுமரி மாவட்டத்தில் ஹைட்ரோ கார்பன் திட்டம் மீனவர்களின் எதிர்ப்பால் ஆரம்பக் கட்டத்திலேயே முடங்கியுள்ள வேளையில், தமிழகத்தில் முதலமைச்சர் விஜய் தலைமையிலான த.வெ.க. கூட்டணி அரசு பொறுப்பேற்றுள்ள நிலையில், ஒன்றிய அரசுடன் இணக்கமான உறவு என்ற புதிய அணுகுமுறையை முன்னெடுத்துள்ளது. இந்நிலையில், கன்னியாகுமரி மாவட்டம், மணவாளக்குறிச்சியில் செயல்பட்டு வரும் ஒன்றிய அரசின் இந்திய அரிய மணல் ஆலை அணுசக்தி கனிமங்களை வெட்டியெடுப்பதற்கான கால அனுமதியை மேலும் ஓராண்டுக்கு நீட்டித்து த.வெ.க. அரசு அதிரடியாக உத்தரவிட்டுள்ளது.

தொடர்ச்சி 4ஆம் பக்கம்